# வியாகுல அன்னை நவநாள் செபம்



வியாகுல அன்னையின் திருத்தலம்

புதுச்செட்டித் தெரு,

கொழும்பு – 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1st Edition : 27-05-1994 - 5,000 Copies

2nd Edition : 17-01-1995 - 5,000 Copies

Printed By :

**RUFINA GRAPHICS**

No. 48, De Lasalle Road,

Colombo - 15.

Telephone : 522097

Books Available at :

**RANSCA GREETINGS**

142/144, St. Anthony's Mawatha,

Colombo - 13.

Imprimatur :

**VERY REV. FR. M. W. PLACIDUS DE SILVA**

Episcopal Vicar

Arch Bishop's House,

Colombo - 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் வருட நினைவஞ்சலி



## திரு. சேவியர் அகஸ்டின் சில்வா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10-11-1941 | 11-11-1994 |

"உள்ளம் கலங்க வேண்டாம் கடவுள் மீது விசுவாசம் வையுங்கள். என் மீதும் விசுவாசம் வையுங்கள்"

*(அருள். 14:11)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபம்

அன்பின் ஊற்றாகிய இறைவா! தேவரீர் சிலுவையில் தொங்கும் பொழுது அனுபவித்த கொடிய வேதனையையும் அளவில்லாத கஸ்திதுன் பங்களையும் பார்த்து, உம் இறைபணியில் ஈடுபட்டு உழைத்து எம் மத்தியில் வாழ்ந்த உம் மகன் சேவியர் அகஸ்டின் சில்வாவின் ஆத்துமத்தை இரட்சித்து உமது மோட்ச இராச்சியத்தில் சகல புனிதர்களோடும் நித்தியானந்த பேரின்பத்திற்கும் பங்காளியாக்க கிருபைபுரிந்தருளும் சுவாமி. (பர. அரு. திரி)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 11-11-95 அன்று சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுச் செட்டித் தெரு வியாகுல அன்னை ஆலயத்திலும் திருகோணமலை புனித மரியாள் பேராலயத்திலும் நடைபெறும் இரங்கற் திருப்பலியில் கலந்து இறைய ருள் வேண்டுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
சகோதரர்கள், சகோதரிகள்
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

77, நியூன்காம் சதுக்கம்
கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத் தந்தையின் உரை

இன்றைய கால கட்டத்திலே எத்தனையோ ஆயிரக்கணக்கான உள்ளங்கள் ஆறுதல் இழந்து கண்ணீரும் கம்பலையுமாக அங்கலாய்க்கின்றனர்.

இப்படியான எத்தனையோ உள்ளங்கள் தம் உள்ளக் குமுறல்களையெல்லாம் வியாகுல அன்னையின் பாதம் வடித்து அன்னையின் ஆசியையும் ஆறுதலையும் அடையத்துடிப்பது நாமறிந்த உண்மை.

சோகப்பளுவால் அமுக்கப்பட்ட உள்ளங்கள் தலைநிமிர்ந்திட கண்ணீரும் கம்பலையுமாக வாழும் உள்ளங்கள் ஆறுதல் அடைந்திட அன்னை காட்டிய வழியிலே இன்பத்திலும் துன்பத்திலும் இறைபுகழ்பாடிட ஏற்றதோர் நூலாக அமைகின்றது, வியாகுல அன்னையின் இந்நவநாள்ப் பிரதி.

சிலுவையின் அடியிலே வீரத்தாயாக விளங்கிய வியாகுல அன்னையின் புகழ்பாடிடுவோம் அவள்பாதம் கூடி ஆண்டவனின் அருளை வேண்டிடுவோம்.

அ. றெஜினோல்ட் லூசன் O.M.I.
வியாகுல அன்னை ஆலயம்
கொழும்பு - 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பு ஆசிரியரின் உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாகுல அன்னையின் நவநாட் செபங்கள்

பாடல் : வியாகுல மாமரியே
தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே
சிந்தை நொந்தழுதாயோ

பன்னிரு வயதினில் ஆலயத்தில் அன்று
அறிஞர்கள் புகழ்ந்தவரை
கரங்களை விரித்தே கள்வனைப் போல்
கழு மரத்தினில் கண்டதினால்

கண்ணீரே சிந்திய மனிதருக்கு
அருள் பண்ணிய திருமகனை
மண்ணவர்க்காகத் தன்னுயிரை இன்று
மாய்த்திடக் கண்டதினால்

குரு: பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே,

எல்: ஆமென்

குரு: இறைவனின் அன்னையும், எங்கள் தாயுமான பரிசுத்த கன்னி மரியாளின் அன்பும், ஆசீரும், அடைக்கலமும் உங்களுக்கு என்றும் கிடைப்பதாக.

எல்: உமக்கும் கிடைப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு: மரியன்னையின் அன்புப் பக்தர்களே, இங்கு கோயில் கொண்டெழுந்து சிலுவை அடியில் அமர்ந்திருக்கும் எம் வியாகுல அன்னை தம்மை அண்டி வருவோர்க்கு எல்லாம் அருள்மாரி பொழிந்து, அபயமளித்து வருகின்றாள். நாம் அவள் புகழ் பாடவும், அவள் வழியாக அடைந்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறவும், அவளின் பரிந்துரைக்காக எம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும் அவள் பாதம் நாடி வந்துள்ளோம். எனவே அவள் புகழ் பாடுவோம்.

## புகழ் மாலை

1. மரியாயே, பரமனின் அன்னையே, நாங்கள் உம்மை வாழ்த்துகின்றோம்.
2. மரியாயே, மீட்பரின் தாயாரே நாங்கள் உம்மை வாழ்த்துகின்றோம்.
3. மரியாயே, முப்பொழுதும் கன்னிகையே, நாங்கள் உம்மை வாழ்த்துகின்றோம்.
4. மரியாயே, மனுக்குலத்தின் மாதாவே, நாங்கள் உம்மைப் போற்றுகின்றோம்.
5. மரியாயே, பரலோக பூலோக இராக்கினியே, நாங்கள் உம்மைப் போற்றுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபம்

அம்மா மரியே, வியாகுலத் தாயே, கல்வாரி மலையில், சிலுவையினடியில், கடும் துயரங்கள் மத்தியில் நீர் ஈன்றெடுத்த உம் அன்புப் பிள்ளை களாகிய நாம் உம் திருமுன் கூடிவந்துள்ளோம். நீர் இந்த இன்ப சந்நிதானத்தில் கோயில் கொண் டெழுந்து, உம் உதவியை நாடி வருபவர்கள் அனைவ ரையும் அரவணைத்து, துயர்துடைத்து, ஆறுதலளிக் கின்றீர். உம் திருமகனிடம் எமக்காகப் பரிந்து பேசி, சகல உதவி சகாயங்களையும் தாராளமாய்ப் பெற்றுத் தந்து வருகின்றீர். ஓ தூய அன்பின் அன்னையாகிய வியாகுல மாதாவே, நீர் எமக்கு பெற்றுத் தந்த சகல இகபர நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின் றோம். உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம் (மௌனமாகப் பெற்ற தனிப்பட்ட நன்மைகளுக்காக நன்றி கூறல்).

ஓ அன்பான மாதாவே, இரக்கத்தின் தாயாரே, இறைவன் தன் அளவற்ற நன்மைத் தனத்தினால் எமக் கருளிய கொடைகளை துர்ப்பிரயோகம் செய்தும், அவர் காட்டிவரும் அருளிரக்கத்தை அசட்டை செய் தும், நாம் நன்றி கெட்டவர்களாக, நம்பிக்கைத் துரோகிகளாக பலமுறையில் நடந்துள்ளோம். கரு ணையே உருவான இறைவனின் அமல அன்னையே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பாவ அக்கிரமங்களை உணர்ந்து மனம் வருந்து கின்றோம். இந்த அவல நிலையிலிருந்து எம்மைக் காத்திட வேண்டு கின்றோம். இறைவனை நிந்தித்து, துரோகம் செய்த பாவிகள் எமக்கு உமது திருமகனி டமிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுத் தரும் பேருப காரத் தாய் நீரல்லவோ? அருள் இழந்து, இருளில் அலைந்து, பாவத்தில் புரண்டு திரியும் எம்மேல் உம் கருணைக் கண்களை திருப்பியருளும். உமது அன்புக் கரங்களை நீட்டி எம்மை வழி நடத்தியருளும்.

இரக்கம் மிகுந்த தாயே, வியாகுல அன்னையே, எம் பாவங்களுக்குப் பரிகாரமாக நம் ஆண்டவரும், உம் திருமகனுமாகிய யேசுவோடு இணைந்து, நீர் பட்டனுபவித்த வேதனைகள் எவ்வளவோ கொடூரமா னவை. உமது அன்புள்ளத்தை ஊடுருவிய கொடிய வாள் எம் நன்றி கெட்ட பாவங்களே என்பதை நினைந்து மனமுருகுகின்றோம். ஓ கருணைக் கடவுளின் கன்னித்தாயே, நீர் சிந்திய கண்ணீர் யாவும் எமக்கு அருட்சுனையாகப் பாயட்டும். எம் உள்ளத்தில் தீய நாட்டங்களை எல்லாம் அகற்றி, இறையன்பை வளர்க்கட்டும், நாம் இறைவனோடு ஒப்புரவாகி, அவருக்கு உகந்த நன்றியுள்ள பிள்ளைகளாக வாழ்ந்திட எமக்கு ஆசீர் அருளும். இவற்றையெல்லாம் உம் திருமகனிடம் பரிந்து பேசி எமக்குப் பெற்றுத் தந்தருளும் தாயாரே ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்

அம்மா என்று அழைத்தால்
குழந்தாய் என்று வருவாள்
அபயம் என்று சொன்னாள் அன்பாய் தூக்கி
நெஞ்சில் வைத்து என்னை காத்துக்கொள்வாள்

1. வேடிக்கை உலகம் பின்னால் நான் சென்றேன்
வேண்டியதெல்லாம் தருமென்று நான் சொன்னேன்.
மீளாத் துன்பம் நானடைந்தேன் என் நிலை
நானுணர்ந்தேன் அம்மா உனையழைத்தேன்.

2. உலக மாந்தர்க்கு கலங்கரை விளக்காய் நீ
கண்மணியாய் எம்மை நாளும் காப்பவள் நீ
உன்னைநான் பிரிந்திடேன் நாழியும் நான்
மறவேன் அம்மா உனையழைத்தேன்.

## அன்னையின் வியாகுலங்கள் மேல் சிந்தனை

குரு: அன்பான சகோதரர்களே,

கல்வாரி மலையில், சிலுவையின் அடியில் எம்மை ஈன்றெடுத்த வியாகுல அன்னை எம் மீட்புக்காக, நம் நல்வாழ்வுக்காக தம் இவ்வுலக வாழ்வில் எதிர் கொண்ட துன்பங்கள் பற்பல அவள் நமக்காகப் பட்டனுபவித்த ஏழு வியாகுலங்களின் மீது எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையை செலுத்தி, அவளுக்கு மிகவும் பிரியமான செபத்தை வார்த்தையில் வடித்து, அவளுக்கு ஆறுதல் அளிப்போம். அவளைச் சந்தோசப்படுத்துவோம்.

## 1. சிமியோனின் இறைவாக்கு

சிமியோன் அவர்களுக்கு ஆசி கூறி, குழந்தையின் தாயாகிய மரியாளைப் பார்த்து, "இதோ இப்பாலன் இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ, எழுச்சியாகவோ அமைந்துள்ளான். எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும். இதனால் பலருடைய உள்ளங்களினின்று எண்ணங்கள் வெளிப்படும்" என்றார். (லூக்: 2/34,35) (மௌனம்)

## செபம்

வியாகுலத்தாயே, நான் என்றும் இறைவனின் அருளிரக்கத்தை வீணாக்காமல், அவருக்கு என்றும் பிரமாணிக்கமாய் வாழ்ந்து, நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் கொடூர பாடுகளின் பயனாக மீட்படைந்தவர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளப்படும் வரத்தை எனக்குப் பெற்றுத்தாரும். (அருள் நிறைந்த மரியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. எகிப்திற்கு அகதியாய்ச் செல்லுதல்

ஆண்டவரின் தூதர் சூசைக்குக் கனவில் தோன்றி, "எழுந்து பிள்ளையையும் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போம். நான் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையைத் தொலைக்க ஏரோது தேடப் போகிறான்." என்றார். அவர் எழுந்து பிள்ளையையும் தாயையும் இரவிலே கூட்டிக்கொண்டு எகிப்துக்குச் சென்றார். ஏரோது இறக்கும் வரை அங்கேயே இருந்தார். (மத்: 2/13–15) (மௌனம்)

## செபம்

வியாகுத்தாயே, எனது எண்ணற்ற பாவங்களினாலும், தீய சிந்தனைகளினாலும் எத்தனையோ தடவை என் இனிய இரட்சகரை எனது இதயத்திலிருந்து விரட்டியிருக்கின்றேன். இனிமேல் ஒருபொழுதும் இவ்விதம் நடக்காமல், என்றும் எம் மீட்பராம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவில் வாழ உறுதி அளிக்கின்றேன். எனக்கு உதவியாயிருந்தருளும். (அருள் நிறைந்த மரியே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சிறுவன் இயேசு காணாமற் போகுதல்

"அவருக்குப் பன்னிரெண்டு வயது நடக்கும்போது திருவிழாவின் முறைப்படி எருசலேமுக்குச் சென்றனர். திருநாட்கள் முடிந்து அவர்கள் திரும்பிய போது, சிறுவன் யேசு எருசலேமில் தங்கி விட்டார். இது அவருடைய பெற்றோருக்குத் தெரியாது. யாத்திரிகர் கூட்டத்தில் அவர் இருப்பார் என நினைத்துக் கொண்டு அவர்கள் ஒருநாள் வழிநடந்த பின்னர், உற்றார் உறவினரிடையே அவரைத் தேடினார்கள். அவரைக் காணாததால் தேடிக் கொண்டு எருசலேமுக்குத் திரும்பினார்கள். மூன்று நாட்களுக்குப் பின் அவரைக் கோயிலில் கண்டார்கள்" (லூக்: 2/42 - 46) (மௌனம்)

# செபம்

வியாகுலத்தாயே எனது பலவீனத்தினாலும், தீய நாட்டங்களினாலும், பசாசின் சோதனைகளாலும் நான் உமது இறைமகனையும், அவரது அருளையும் இழக்க நேரிடுகையில், என் தவறுகளை உணர்ந்து, நொறுங்கிய உள்ளத்தோடு அவரைத்தேடி அடையவும், அவரிலே நிலைத்திருக்கவும் அருள்புரிவீராக. (அருள் நிறைந்த மரியே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. கல்வாரிப் பாதையில் யேசு

"அவருடைய ஆடைகளைக் களைந்து, செந்நிறப்போர்வையை அவருக்குப் போர்த்தினர் முள்ளால் ஒரு முடியைப் பின்னி அவர் தலையில் வைத்தனர். வலக்கையில் ஒரு பிரம்பைக் கொடுத்தனர். அவர் முன் முழந்தாளிட்டு, "யூதரின் அரசே வாழி" என்று எள்ளி நகையாடியபின், அப்போர்வையைக் கழற்றி விட்டு, அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறையக் கூட்டிச் சென்றனர்.

(மத் : 27/28 - 31) (மௌனம்)

## செபம்

வியாகுலத்தாயே, கல்வாரிப் பாதையில் உமது திருமகனின் பரிதாப கோலத்தையும் பட்ட வேதனைகளையும் கண்டு மிகவும் வியாகுலப்பட்டீரே. என்னுடைய கணக்கற்ற கொடூர பாவங்களே அவரை இவ்வாறு உருக்குலையச் செய்தன. இனிமேல் நான் பாவத்தை விலக்கி புண்ணியத்தில் வாழ அருள் புரிவீராக.

(அருள் நிறைந்த மரியே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. இயேசு சிலுவையில் உயிர் துறத்தல்

"யேசுவின் சிலுவையருகில் அவருடைய தாயும், தாயின் சகோதரியும், கிளயோப்பாவின் மனைவியுமான மரியாளும், மதலேன் மரியாளும் நின்று கொண்டிருந்தனர். யேசு தம் தாயையும், அருகில் நின்ற தன் அன்புச் சீடரையும் கண்டு, தம் தாயை நோக்கி, " அம்மா இதோ உம் மகன்," என்றார். பின்பு சீடரை நோக்கி, "இதோ உன் தாய்" என்றார். அந்நேர முதல் அந்தச் சீடர் அவளை தம் வீட்டில் ஏற்றுக்கொண்டார். பின்பு எல்லாம் நிறைவேறியது என்ற அறிந்த யேசு, "தாகமாயிருக்கிறது" என்றார். மறைநூல் நிறைவேறவே இப்படிச் சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையக் காடி இருந்தது. அதில் கடற்களானைத் தோய்த்து ஈசோப்பில் பொருத்தி, அதை உயர்த்தி அவரது வாயில் வைத்தார்கள். காடியைச் சுவைத்த பின் யேசு "எல்லாம் நிறைவேறியது" என்றார். பின்பு தலை சாய்த்து ஆவியைக் கையளித்தார்.

(அரு : 19/25 - 30) (மௌனம்)

## செபம்

வியாகுல அன்னையே, கல்வாரி மலையில் சிலுவையினடியில் அத்தனை வேதனைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான விசுவாசத்துடன் இறை சித்தமாக ஏற்றுக்கொண்டீரே. நாங்களும் எங்கள் வாழ்க்கைப் பயணத்தில் குறுக்கிடும் சகல துன்பதுரிதங்களையும் கடவுள் சித்தமாக ஏற்று, பொறுமையுடன் தாங்கிக் கொள்ள எமக்குப் பலத்தையும் திடத்தையும் தந்தருளும். (அருள் நிறைந்த மரியே)

## 6. யேசுவின் விலா ஈட்டியால் திறக்கப்படல்

"படைவீரர் வந்து யேசுவோடு சிலுவையில் அறையுண்டிருந்த இருவரின் கால்களையும் முறித்தார்கள். பின்பு யேசுவிடம் வந்தார்கள். அவர் ஏற்கனவே இறந்திருப்பதைக் கண்டு, அவருடைய கால்களை முறிக்கவில்லை. ஆனால் படைவீரன் ஒருவன் அவருடைய விலாவை ஈட்டியால் குத்தினான். உடனே இரத்தமும் நீரும் வெளிவந்தன. இதைப் பார்த்தவனே இதற்குச் சாட்சியம் கூறியுள்ளான். அவனுடைய சாடசியம் உண்மையானதே." (அரு : 19/32 - 35) (மௌனம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபம்

வியாகுலத் தாயே, உமது நேச மகனின் மார்பு குத்தித் திறக்கப்பட்டு, அவருடைய தூய இதயத்திலிருந்து இரத்தமும் நீரும் பாய்ந்தோடியதை பார்த்த வேளையில், உமது பெற்ற மனம் எவ்வளவு பதறியிருக்கும். அன்பான தாயே, இந்த இறை கொலைப் பழியைச் செய்த பாதகன் நான் தானம்மா. என் பாவங்களின் கொடிய விளைவுகளை உணர்ந்து, இறைவனின் இரக்கத்தை ஏற்று, நான் திருந்தி வாழ உதவி செய்தருளும். (அருள் நிறைந்த மரியே)

# 7. யேசுவின் உடல் அடக்கம் செய்யப்படல்

"அரிமத்தியா ஊர் சூசை என்பவர் ஒருவர் இருந்தார். அவரும் யேசுவின் சீடர். ஆனால் யூதர்களுக்கு அஞ்சி அதைக் காட்டிக்கொள்ளவில்லை. மேற்சொன்ன நிகழ்ச்சிகளுக்குப்பின் அவர் யேசுவின் சடலத்தை எடுத்துவிட பிலாத்துவிடம் விடை கேட்டார். பிலாத்து விடை அளித்தான். அவர் வந்து யேசுவின் சடலத்தை எடுத்தார். யேசுவின் சடலத்தை எடுத்து, யூதரின் அடக்க முறைப்படி பரிமளபெருட்களுடன் துனிகளைச் சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையுண்ட இடத்தில் தோட்டம் ஒன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அத்தோட்டத்தில் புதுக்கல்லறையொன்று இருந்தது. அதில் யாரையும் அதுவரை வைத்ததில்லை. அருகிலேயே அந்தக் கல்லறை இருந்ததாலும் அன்று யூதரின் பாஸ்காவுக்கு ஆயத்த நாளானதாலும் யேசுவை அதில் வைத்தனர்.
(அரு : 19/38 - 42) (மௌனம்)

# செபம்

வியாகுலத்தாயே, அற்ப நீசபாவியாகிய எனக்காக நீர் இத்தனை கொடூர வேதனைகளை எல்லாம் அனுபவித்தீரே. அம்மா, தாயே, நீர் எனக்காகப்பட்ட அத்தனை வியாகுலங்களையும் நான் என்றம் மறவாமல், என் மனதிலிருத்தி அன்புக்குப் பிரதி அன்பு காட்டும் உண்மைப் பக்தனாக வாழ அருள் புரிந்தருளும். (அருள் நிறைந்த மரியே)
(இங்கு மறை உரை ஆற்றலாம்)

# வியாகுல அன்னையை நோக்கி மன்றாட்டுக்கள்

குரு: மரி பின் சென்றால் மனமயக்கம் இல்லை.
மரிபெயர் சொன்னால் மனத்தளர்வில்லை.
அவளெம்மைக் காத்தால் அச்சமேயில்லை.
அவள் துணை செய்தால் அடைவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோள்" எனக் கூறி எமக்கு நம்பிக்கை ஊட்டுகிறார் புனித பேர்ணாட். எனவே நம்பிக் கையுடன் எமது விண்ணப்பங்களை மரியன்னையின் கமல பாதங்களில் சமர்ப்பிப்போம்.

1. "ஆகட்டும்" என்ற சம்மதத்தால் இறைவனின் அழைப்பை ஏற்று அதற்கு என்றும் பிரமாணிக் கமாய் வாழ்ந்த வியாகுல அன்னையே, உம் திருமுன் கூடியிருக்கும் நாம் அனைவரும் இறைவனால் நமக்களிக்கப்பட்டிருக்கும் அழைத்தலுக்கு என்றும் பிரமாணிக்கமாயிருந்து புனிதராய் வாழ அருள் புரிய வேண்டுமென்று தாயே உம்மை மன்றாடுகின்றோம்.

பதில்: தாயே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

2. "இதோ உம்முடைய அடிமை" என்று உம்மை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்த வியாகுல தாயே, உம் பிள்ளைகளாகிய நாமும் உமது மாதிரியைப் பின்பற்றி, எம்மை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்து, உண்மைக் கிறிஸ்தவர்களாய் எங்கும் எதிலும் என்றும் வாழ உதவி புரிய வேண்டுமென்று தாயே. . .

3. அனைத்திலும் இறை சித்தத்தை ஏற்று, இறைவனுக்கு என்றும் ஏற்புடையவளாய் வாழ்ந்த வியாகுல அன்னையே, இன்ப வேளைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல, துன்பதுயர வேளைகளிலும் இறைவன்சித்தத்தை ஏற்று அவர் கட்டளை களைக் கடைப்பிடித்து வாழ உதவி புரிய வேண்டுமென்று தாயே. . .

4. கானாவூர்க் கலியாண வீட்டில் தம்பதிகளுக்கு ஏற்பட்ட குறையை அறிந்து அதை நிறைவு செய்ய முற்பட்ட வியாகுல அன்னையே, சுய நலம் மறந்து பிறர்நலம் தேடி வாழும் பெரும் குணத்தை எமக்குப் பெற்றுத்தர வேண்டு மென்று தாயே. . .

5. கல்வாரி மலையில் இறைவனால் எமக்குத தாயாக அருளப்பட்ட வியாகுல அன்னையே, எங்களையும் எங்கள் குடும்பங்களையும் தொழில் துறைகளையும் ஆசீர்வதித்துப் பாதுகாத்து, பராமரித்தருள வேண்டுமென்று தாயே. . .

(சொந்த தேவைகளையும் சேர்த்துக் கொள்ளவும்)

குரு: அன்பும் அருளும் நிறைந்த நேசத்தாயே மிகவும் இரக்கமுள்ள வியாகுல அன்னையே, உம்மிடம் அடைக்கலம் நாடி வந்து, ஆதரவைத் தேடி பரிவோடு மன்றாடினோர் எவரையும் நீர் கைவிட்டதாக ஒருபோதும் உலகில் கேள் விப்பட்டதில்லையே. செல்லொணாத் துயரத் தோடும் உள்ள நம்பிக்கைகளோடும் உமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுன் வந்து, உமது இரக்கத்திற்காகக் காத்திருக்கும் அடியார்களைக் கருணைக்கண் கொண்டு பாரும். எங்களுக்காக உம் திருமக னிடம் பரிந்து பேசும். எம் மன்றாட்டுக்களை யெல்லாம் புறக்கணியாமல் பெற்றுத் தந்தருளும் தாயாரே ஆமென்.

## நவநாட் செபம்

பரலோக பூலோக இராக்கினியே, மனுக்குலத்தின் அடைக்கலமே, பாவிகளின் தஞ்சமே எங்கள் அன்பான வியாகுல மாமரித்தாயே, எங்கள் சொந்தப் பேறுகளில் நம்பிக்கை வையாமல் உமது வல்லமை நிறைந்த பரிந்துரைகளில் நம்பிக்கை கொண்ட வர்களாய் எங்கள் துன்ப துயரங்களில் உமது உதவியையும் ஆதரவையும் இரக்கத்தையும் பெறுவோமென்ற அசையாத நம்பிக்கையுடன், உமது சந்நிதானம் நாடி வந்து, உமது திருமுன் தாழ்பணிந்து நிற்கும் உமது அடியார்களைக் கருணைக் கண் கொண்டு பார்த்தருளும்.

வியாகுல அன்னையே, கல்வாரி மலையில் இறை வனே உம்மை எமக்குத் தாயாகத் தந்தருளினார். அம்மா தாயே, உலகில் எங்கள் ஆண்டவள் நீரல்லவோ? எங்கள் தஞ்சம் நீரல்லவோ? எங்கள் ஆதரவும் நம்பிக்கையும் அடைக்கலமும் நீரல்லவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கமுள்ள தாயே, எங்கள் வாழ்க்கையில் நாங்கள் பட்டனுபவிக்கும் வேதனைகளையும் சோதனைகளையும் துன்ப துயரங்களையும் நீர் நன்கு அறிவீர். இச் சுமைகளின் பழுவைத் தாங்க முடியாது குனிந்து, வளைந்து, இளைத்துக் களைத்து நம்பிக்கையிழந்தவர்களாய் அமைதியின்றி அலைக்கழிக்கப்படுகின்றோம்.

அம்மா, தாயே தஞ்சமென்றடைய இடமோ இல்லை. ஆதரவளிக்க மனிதர்களுமில்லை சஞ்சலம் அகற்றத் தந்தையுமில்லை. ஆறுதலளிக்க அன்னையுமில்லை. என் செய்வேன் தாயே? நீர் இந்த இன்ப சந்நிதானத்தில் எழுந்தருளியிருந்து ஆதரவற்றவர்களையும் பல்வேறு சுமைகளினால் அலைக்கழிக்கப் படுகின்றவர்களையும் உமதண்டை அழைக்கின்றீர். உமது அழைப்பின் குரல் கேட்டு, உமதண்டை வந்திருக்கும் அடியார்களைக் கருணைக் கண் கொண்டு பாரும். எங்கள் மேல் அன்பு கூரும் உமது திருமகனைக் கேளும். எமது இடர்களை அகற்றும் எமக்குத் தேவையானவைகளைப் பெற்றுத்தாரும்.

அம்மா மரியே, வியாகுலத்தாயே, நாங்கள் உமது வல்லமை மிக்க பரிந்துரையால் அடைந்ததும் அடைவதும் அடையப்போவதுமாகிய சகல உதவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகாயங்களுக்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்கள் நேசத்தாயே எங்களையும் எங்களுக்குரிய யாவற்றையும் உமக்குச் சொந்தமாக்குகின்றோம். எங்கள் அனைவரையும் ஏற்று, உமது அன்பில் அரவணைத்து என்றும் பாதுகாத்தருளும் தாயாரே ஆண்டவளே . . . ஆமென்.

## வியாகுலமாதாவின் பேரில் மன்றாட்டுமாலை

ஆண்டவரே இரக்கமாயிரும் (2)
கிறிஸ்துவே இரக்கமாயிரும் (2)
ஆண்டவரே இரக்கமாயிரும் (2)

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும், கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்,

பரலோகத்தில் இருக்கிற பிதாவாகிய சருவேசுரா,
**எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி**

உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சருவேசுரா – எங்களை . . .

பரிசுத்த ஆவிவாகிய சருவேசுரா– எங்களை . . .

தூய திரித்துவமாய் இருக்கிற ஏக சருவேசுரா,
–எங்களை . . .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி வணக்கத்திற்குரிய தேவதாயாராகிய வியாகுல மாதாவே, ✡

பாவம் நிறைந்த இப்பரதேசத்திற் சொல்லிடங்காத வியாகுலம் அனுபவித்த பரிசுத்த மாதாவே, ✡

உம்முடைய திவ்விய குழந்தையான யேசு நாதர் மாட்டுக் கொட்டிலில் காற்று, குளிர், தரித்திரம் முதலியவைகளாற் பட்ட உபத்திரவத்தைக் கண்டு அளவற்ற துயரமடைந்த மாதாவே, ✡

விருத்தசேதனத்தால் திவ்விய குழந்தை சிந்தின இரத்தத்தையும் அனுபவித்த நோக்காடுகளையும் கண்டு அழுது துக்கித்த மாதாவே ✡

யேசுநாதருக்கும் உமக்கும் வரப்போகிற நிர்ப்பந்தங்களை அர்ச்.சிமியோன் வெளிப்படுத்தக் கேட்டு வியாகுலவாளால் ஊடுருவப்பட்ட மாதாவே. ✡

தேவாலயத்தில் உம்முடைய திவ்விய குமாரனைத் தேவநீதிக்கு உத்தரிப்புப் பலியாக மிகுந்த மனத் துயரத்துடனே ஒப்புக்கொடுத்த மாதாவே, ✡

ஏரோதென்கிற இராசா உம்முடைய நேசபாலனைக் கொல்லத் தேடுகிறதைக் கேட்டு மனோவாக்குக் கெட்டாத சஞ்சலத்துக்கு உள்ளான மாதாவே, ✡

**✡ எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவபிதாவின் கட்டளைப்படியே திவ்விய குழந்தையை எடுத்துக்கொண்டு இராக்காலத்தில் மிக்க துரிதத்துடனே எகிப்தென்கிற பரதேசத்துக்கு ஓடிப்போன மாதாவே, ✡

அந்த இராச்சியத்தில் அநேக வருடம் திவ்விய பாலனோடு பரதேசியாய் இக்கட்டு அனுபவித்த மாதாவே, ✡

பன்னிரெண்டு வயதில் உமது ஆனந்தமாகிய திவ்விய யேசு உம்மைப் பிரிந்து காணமாற் போனதினால் மூன்றுநாள் துக்கசாகரத்தில் அமிழ்ந்தின மாதாவே, ✡

யேசுநாதர் வேதத்தைப் போதிக்கச் சுற்றித் திரிகையில் அநேகமுறை பாவிகளான யூதர் அவரை நிந்தித்துத் தூஷித்ததினால் மட்டற்ற வியாகுலம் அடைந்த மாதாவே, ✡

யேசுநாதர் பாடுபடப் போவதற்கு விடை கொடுத்து அனுப்பிவைத்தபோது ஆத்துமம் பிரிந்தாற் போலத் துக்க வேதனைக்குட்பட்ட மாதாவே, ✡

யேசுநாதர் பூங்காவனத்தில் துக்க மிகுதியால் இரத்த வியர்வை வியர்த்து மரண அவஸ்தைப்பட்டதைக் கேட்டு மனமிளகிப் பரிதவித்த மாதாவே, ✡

✡ **எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்விய கர்த்தர் ஒரு கள்வனைப்போலப் பாவிகளாற் பிடிக்கப்பட்டுச் சங்கிலி கயிறுகளாற் கட்டப்பட்டதையும் சீஷர்களாற் கைவிடப்பட்டதையும் அறிந்து திரளான கண்ணீர்விட்டு அழுத மாதாவே, ✡

உம்முடைய மாசற்ற குமாரன், அன்னாஸ் கைப்பாஸ் என்கிற பிரதான குருக்கள் வீட்டில் பொய்ச் சாட்சிகளாற் குற்றஞ்சாட்டவும், சாவுக்கு நியமிக்கவும்பட்டதைக் கேட்டுத் தயங்கிக் களைத்த மாதாவே, ✡

திவ்வியநாதர் நீச ஊழியர்களால் திருக்கன்னத்தில் அடிக்கப்பட்டு, திருமுகத்தில் துப்பப்பட்டு, இரவுமுழுதுஞ் சகலவித நிந்தை அவமான நிஷ்டூரத்துடன் வாதிக்கப்பட்டதைக் கேட்டு வியாகுலம் நிறைந்த மாதாவே, ✡

ஆண்டவர் ஒரு பாதகனைப்போல் பிலாத்து என்கிற துரையிடத்தில் ஒப்பிட்டுப் பற்பல குற்றஞ் சுமத்தப்பட்டு ஏரோது என்கிற இராசாவினாலும் அவன் சேனையினாலும் பைத்தியனாக நிந்திக்கப்பட்டதினால் அளவற்ற துயரப்பட்ட மாதாவே, ✡

✡ எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலாத்து மாசற்ற நாதரைப் பறபாஸ் என்கிற கொலைப்பாதகனோடு ஒரேவரிசையில் நிறுத்திக் காண்பிக்க, யூதர் பாதகனை விடுதலையாக்கி நாத ரைக் கொல்லக் கூவினதால் அகோர துக்கத்தால் மனம் நொந்த மாதாவே, ✡

நாதர் கற்றூணிற் கட்டுண்டு நிஷ்டூரச் சேவகராற் பட்ட அடியெல்லாம் உமது இருதயத்தில் பட்டாற்போல வேதனை அனுபவித்த மாதாவே, ✡

கசைஅடியால் உம்முடைய நேச யேசுவின் திருச்சதை தெறித்து, திருஇரத்தம் வெள்ளமாயோட, திருமேனியெல்லாம் ஒரே காயமானதைக் கண்டு இருதயம் பிளந்து விம்மி அழுத மாதாவே, ✡

கர்த்தருடைய திருச்சிரசில் முண்முடிவைத்து அழுத்தவும், மூங்கிற்றடியால் அடிக்கவும், எப்பக்கத்திலும் முள்ளுகள் தைத்திறங்கவும் அவைகளின் வழியாகச் சிந்தின இரத்தத்தால் திருமுகமுந் தாடியும் நனையக்கண்டு வியாகுல முட்களால் இருதயத்திற் குத்தப்பட்ட மாதாவே, ✡

உம்முடைய ஏக நேச குமாரனைச் சிலுவையில் அறையவேண்டுமென்கிற அநியாயத் தீர்வையைக் கேட்டு வியாகுல அம்பினால் ஊடுருவப்பட்ட மாதாவே, ✡

✡ **எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்முடைய திவ்விய சுதன் மகா அவமானத்தோடு திரளான சனங்கள் சூழப்பாரமான சிலுவையைச் சுமந்து வருகிறதைக் கண்டிரங்கிப் பிரலாபித்த மாதாவே, ✡

ஒரு செம்மிறியைப்போலக் கொலைக்களத் துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்ட உம்முடைய நேசகுமாரனைப்பின்சென்று துயரத்தாற் புலம்பின மாதாவே, ✡

துஷ்ட சேவகர் திவ்விய யேசுவின் காயங்களோடு ஒட்டியிருந்த உடைகளைத் தோலுரிக்கிறதுபோல் உரிக்கக்கண்டு ஏங்கின மாதாவே, ✡

அவரைச் சிலுவையில் அறைகிற சத்தத்தைக் கேட்டு வியாகுல மிகுதியால் மயங்கி விழுந்த மாதாவே, ✡

உம்முடைய நேசகுமாரன் இரு கள்வருக்கு நடுவே உயர்ந்த சிலுவையில் நிறுத்தப்பட்டுத் திரளான சனங்களால் நிந்தித்துத் தூஷிக்கப் பட்டதைப் பார்த்து மனமுருகிக் கண்ணீர் வெள்ள மாய்ச் சொரிந்த மாதாவே, ✡

யேசுநாதர் ஒருசாமஞ் சிலுவையில் கொடூர நிர்ப்பந்தங்களுடனே தொங்குகிறதைக் கண்டு வியா குலத்தால் அவரோடு சிலுவையில் அறையுண்ட வளைப்போல் நின்ற மாதாவே, ✡

✡ **எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுநாதர் பரமபிதாவை நோக்கி, "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கூறிய துயர வசனங் கேட்டுப் பரிதவித்த மாதாவே, ✡

உம்முடைய நேசகுமாரன் தலைகுனிந்து மரிக்கிறதைக் கண்டு உமது பிராணன் பிரிந்து போகிறது போல் அதிக வேதனைக்குட்பட்ட மாதாவே, ✡

உயிர் பிரிந்த திவ்விய யேசுவின் விலாவை ஒரு சேவகன் ஈட்டியாற் குத்தித் திறந்ததைக் கண்டு வியாகுல வாளால் ஊடுருவப்பட்ட மாதாவே, ✡

சீடர்கள் சிலுவையினின்று இறக்கின நாதரின் திருச்சரீரத்தை உமது மடியில் வளர்த்தியபோது திருக்காயங்களைத் துயரத்தோடு உற்றுப்பார்த்து முத்திசெய்து திரளான கண்ணீர் சொரிந்து பிரலாபித்த மாதாவே, ✡

உம்முடைய நேச யேசுவின் திருச்சரீரம் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டபோது துக்கசாகரத்தில் அமிழ்ந்தின மாதாவே, ✡

அவர் அடக்கப்பட்ட பின்பு நீர் தனியாயிருந்ததினால் அவருடைய திருப்பாடுகளை இடைவிடாமல் நினைத்து அளவற்ற துக்க வியாகுலத்துக்குட்பட்ட மாதாவே, ✡

✡ **எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாகுல மிகுதியாற் சகல வேதாட்சிகளை விட அகோர வேதனை அனுபவித்த மாதாவே, ✡

எம் நிமித்தம் இத்தனை வியாகுல துன்ப துயரத்துக்குள்ளான மாதாவே, ✡

சகல உபத்திர வியாகுலத்திலும் நம்பிக்கை அமரிக்கையோடு தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிந்த மாதாவே, ✡

சகல கஸ்தி துன்பங்களிலும் மாறாத பொறுமையின் உத்தம மாதிரிகையான மாதாவே, ✡

துன்பதுயரத்தில் அடியோர்க்கு அடைக்கலமும் ஆறுதலுமாயிருக்கிற வியாகுல மாதாவே, ✡

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியாகிய யேசுவே (3 முறை)

1. எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
2. எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
3. எங்கள்மேல் இரக்கமாயிரும்

மு. யேசுகிறிஸ்துவின் திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரராய் இருக்கத்தக்கதாக

து. மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

✡ **எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபிப்போமாக

கருணைச் சமுத்திரமாகிய திவ்விய யேசுவே, தேவரீர் அடியோர்களுக்காகப் பட்ட கணக்கில்லாத கொடூர கஸ்தி நிர்ப்பந்த வேதனைகளுக்கும் மோட்ச இராச்சியத்திற் சுதந்தரித்துக் கொண்ட அளவில்லாப் பேரின்பமகிமை வல்லபத்திலும் உம்முடைய நேசத் திருமாதாவைப் பங்காளியாக்கத் திருவுளமானீரே, தேவரீர் உம்முடைய திருப்பாடுகளையும் நேசமாதாவின் வியாகுலத்தையும் பார்த்து உமது திருஇரத்தத்தின் விலைமதியாத பூரண பலன்களுக்கும் அத்திருமாதாவின் புண்ணிய பேறுகளுக்கும் அடியோர்களைப் பங்களிகளாக்கி உமது பேரின்ப இராச்சியத்தின் ஆனந்த மகிமைக்கு எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும், ஆமென்.

## வியாகுலத் தாயின் திருப்பலி

சபை மன்றாட்டு : எல்லாம் வல்ல இறைவா, உம் திருமகன் சிலுவையில் உயர்த்தப்பட்ட போது அவருடைய அன்னையும் அங்கு நின்று துயருறத் திருவுளமானீர். உமது திருச்சபை கிறிஸ்துவின் பாடுகளில் அந்த அன்னையோடு தோழமை கொண்டு அவருடைய உயிர்ப்பிலும் பங்கு கொள்ளச் செய்தருளும். உம்மோடு பரிசுத்த ஆவியின் . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை மன்றாட்டு

இரக்கமுள்ள இறைவா யேசுவின் சிலுவை அருகில் நின்ற புனித கன்னி மரியாளை அன்புமிக்க அன்னையாக எங்களுக்குத் தரக்கருணை கூர்ந்தரே அவ்வன்னையின் நினைவு நாளிலே, உமது மகிமைக்காக நாங்கள் அளிக்கும் செபங்களையும் காணிக்கைகளையும் தயவாய் ஏற்றருளும். எங்கள் ஆண்டவராகிய. . .

# நன்றி மன்றாட்டு

இறைவா, நித்திய மீட்பளிக்கும் திருவுணவை உட்கொண்ட நாங்கள் உம்மைத் தாழ்மையுடன் வேண்டுகின்றோம். புனித கன்னிமரியாள் யேசுவுடன் துயருற்றதை நாங்கள் நினைவில் கொண்டு கிறிஸ்து படவேண்டிய வேதனைகளில் இன்னும் குறைவாயிருப்பதைத் திருச்சபைக்காக நாங்கள் ஏற்று நிறைவு செய்வோமாக. எங்கள் ஆண்டவராகிய...

# இறுதி ஆசீர்

குரு: சிலுவையடி வேதனைகள் மத்தியில் உங்களைத் தம் மக்களாக ஈன்றெடுத்த வியாகுல அன்னை உங்களை அரவணைத்து, பாதுகாத்து பராமரிப்பாளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்: ஆமென்.

குரு: உங்களுக்காகத் தம் திருமகனிடம் என்றும் பரிந்து பேசும் வியாகுல அன்னை உங்கள் குறைகளைப் போக்கி, துன்பங்களை அகற்றி, தேவைகளை அளித்து அமைதியுடன் வாழ அருள் புரிவாளாக.

எல் : ஆமென்.

குரு: நம் ஆண்டவர் யேசுகிறிஸ்துவின் மீட்புப் பணியில் நெருங்கிய முறையில் பங்கெடுத்து இணை இரட்சகியாகச் செயற்பட்ட வியாகுலத் தாய், உங்களை வழி நடத்தி முடிவில்லா வாழ்வுக்கு இட்டுச் செல்வாளாக.

எல் : ஆமென்

குரு: வியாகுலத்தாயின் வல்லமைமிக்க மன்றாட்டுக்களால் உங்கள் கருத்துக்களெல்லாம் நிறைவேறும்படிக்கு பிதா, சுதன், பரிசுத்த -ஆவி உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

எல் : ஆமென்.

(ஆசி நீர் தெளித்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடல் :** எம் வியாகுல மாதாவே
உம் பாதம் சரணடைந்தோம்
எம் மானிட வாழ்வினிலே எமக்
காதரவாய் வாராய்

1. அருளாலே நிறைந்தவளே
இறையோனுக்குகந்தவளே
கல்வாரி மலையினிலே
எங்கள் தாயாய் ஆனீரே (2)

தாயே சரண முன் பதமலர் சரணம்
சரணம் சரணம் சரணம் (2)
பூவே சரணம் புனிதமே சரணம்
சரணம் சரணம் சரணம் (2)
அன்னையே சரணம் அருள் நிறைந்தவளே
சரணம் சரணம் சரணம் (2)
பணிந்து உம்மைப் போற்றுகின்றோம்
சரணம் சரணம் சரணம்

2. இறைவார்த்தை வழிதனிலே
உம் வாழ்வை அமைத்தீரே
உம் மைந்தர் நாம் உம் போன்று
என்றும் வாழ அருள்வீரே (2)
(தாயே சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இந்த மாய உலகினிலே [illegible]
எங்கள் துயர்தனைக் களைவீரே
உம்மை நாடி வருவோர்க்காய்
உம்மகனிடம் வேண்டிடுவீர்

(தாயே சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வியாகுல அன்னையின் திருத்தல முன் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org